**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 286,739,143 ஆக இருந்ததுடன் அதில் 04 வருடங்களை விஞ்சிய கூட்டுப்பெறுமதி ரூபா 113,713,579 ஆன கடன் கொடுத்தோர் மீதி காணப்பட்டதுடன் அந்தக் கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறுவனத்தால் எடுப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் நிருவாகம்) இன் பங்களிப்புடன் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நீண்ட கால கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்வத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பரிவின் (அ), (ஆ) | நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2019 2023 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுமொத்தமாக ரூபா 203,876,407 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப் பட்டிருந்தது. | மிகைப் பணத்தை மிகையான வைப்புக் கணக்குகள் மூன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் சகல நிலையான வைப்புக்களும் 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக நிருவாக சபையின் உரிய அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.ள |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 02 வருடங்களை விஞ்சிய நிறுத்திவைத்தல் ரூபா 12,778,117 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்களுக்கான தகைமைகளைப் பரீட்சித்து உரிய கணக்குகளுக்கோ அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கோ செலவு வைப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் 01/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக உரித்தின்றிய உத்தியோகத் தருக்கு 2019 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தால் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு மாத்திரம் அதற்காக ரூபா 687,965 எரிபொருள் செலவினம் செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்குதல் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 97,086,919 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 211,938,598 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 309,025,517 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு உயர் கல்வி விரிவுபடுத்துதல் மற்றும் அபிவித்தி செய்தலை துரிதப்படுத்துதல் (AHEAD)

செயற்திட்டம் மூலம் மூலதன நிதி ஏற்பாடுகளின் பெறுவனவு அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,981,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 400 வாசித்தல் கதிரைகள் மற்றும் 200 வாசிப்பு மேசைகள் குறித்துரைத்த மாதிரிகளுக்கு இணங்க வழங்காமையின் காரணமாக பயன்படுத்தப்ப டாமல் கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டு வரையும் கம்பஹா உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் விடுதி அறையில் வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வுக் குழு பரிந்துரையின் பிரகாரம் அந்த பொருட்கள் குறித்துரைத்த மாதிரிகளின் பிரகாரம் தயாரித்து வழங்கி பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அவ்வாறில்லையாயின் அதனை அகற்றுமாறும் அல்லது அகற்றாதிருக்குமாயின் அவற்றை உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கையேற்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக வழங்குநருக்கு கடிதம் மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதிரிகளுக்கு இணங்க தயாரித்துக் கொள்வதற்கோ அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட அந்தப் பொருட்களை அகற்றுவதற்கு உரிய நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மின்சார செலவினத்தைக் குறைக்கும் நோக்கில் 2017-2021 இற்கு இடையி லான காலப் பகுதியில் தெஹிவளை, குருநாகல், கம்பஹா, கண்டி உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ரூபா 44,573,400 செலவினத்தில் ஸ்தாபிக்கப் பட்ட சூரிய கள வலுசக்தி முறைமைக் காக மொத்த மின்சார இணைப்பை பெற்றுக்கொள்ளாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடாமை யின் காரணமாக இந்த முறைமை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டம் மூலம் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும், பராமரித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளல் தொடர்பாக முறை யான உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 71,120,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு சேவை செலவினத்தைக் கவனத்திற் கொள்ளாமல் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளல் | ரூபா 20.6 மில்லியன் மேலதிக நிதி ஏற்பாடு திறைசேரி மூலம் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமையால் நிறுவனத்தின் உழைப்புக்களில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை | பெறுகை நடவடிக்கைகள் அங்கீரிக்கப்பட்ட பாதீட்டு நிதி ஏற்பாட்டு எல்லையின் கீழ் மேற்கொள்வதை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உடன்படிக்கை செய்ததன் காரணமாக மதிப்பீடு செய் யப்பட்ட செலவினத்தை விஞ்சி ரூபா 20,691,402 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | எடுக்கப் படுகின்றது. | அவதானித்தல் வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தால் மீளாய்விண்டிலும், முன்னைய ஆண்டுகளிலும் நடாத்தப்பட்ட டிப்ளோமா பாடநெறிகளுக்காக மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை அளவை சரியாக மதிப்பீடு செய்யாமையின் காரணமாக அவ்வாறு அறவிடப்பட்ட தொகையில் ரூபா 15,507,633 சேமிப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவத்தால் அதிக கட்டுப் பாட்டுடன் செலவினங்கள் செய்யப் பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை விட உள்ளபடி யான செலவினம் குறைவடைந்த மையும் டிப்ளோமா கையளித்தலுக்காக மாணவர்க ளிடமிருந்து அறவிடப்பட்ட கல்வி நிறுவனத்தின் கலைக் குழுவின் பரிந்துரை மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட் டுள்ளது. | மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தின் அளவை சரியாக மதிப்பீடு செய்து பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததுடன் மிகுதித் தொகை ஏற்படுமாயின் மீள செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கடந்த 03 வருட காலத்தில் நிறுவனத் தால் பாடநெறிக்காக சேர்த்துக் கொள்வதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் 08 மாதங்கள் முதல் 09 மாதங்களுக்கிடையிலான தாமதத் துடன் விநியோகித்தல் மற்றும் வினைத்திறனான விளம்பர ஊடகம் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பாட நெறிக்காக மாணவர்களின் விண்ணப்பம் விண்ணப்பித்தல் முறையே 28,000, 21,701 மற்றும் 15,801 ஆக மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்திருந்தது. | 2020/2021 இரண்டு ஆண்டு காலத்தில் கொவிட் தொற்று நோய் பரவியதன் காரணமாக பாடநெறி களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதனால் மீண்டும் புதிதாக மாணவர் தொகுதியொன்றை சேர்த்துக் கொள்வதற்கு இட வசதிகள் காணப் படாமையினால் இந்த மாணவர்களை சேர்த்துக் கொள்ளல் 08 மாதங்களுக்கும் 09 மாதங்களுக்கும் இடையிலான தாமதத்திற்கு காரணமாக இருந்ததுடன் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார கஷ்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் பாட நெறிகளுக்கு வருகை தரல் குறைவ டைந்திருந்தது. | பாடநெறிகளுக்காக இலக்கிடப்பட்ட தொகுதிகளை இனங் கண்டு அறிவித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகக் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான பிரகாரம் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்படாமல் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனததால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நான்கு | காணியின் உரித்து தொடர்பாக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட | உரித்தை உறுதிப் படுத்தியதன் பின்னர் விரைவாக கட்டிடத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | மாடிக் கட்டிடமொன்றுக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 36,989,498 முற் பணத்தொகையும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 13,941,163 இடைக் காலக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் காணியின் சட்ட ரீதியான உரித்து காணப்படாமையின் காரணமாக நிர்மாணங்கள் நிறுத்தப் பட்டதனால் செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்கு உரிய ரூபா 8,330,743 ஆன செயலாற்றல் காப்புறுதி மற்றும் ரூபா 33,322,972 ஆன முற்பணக் காப்புறுதியின் காலம் நீடிக்கப்படாமையின் காரணமாக 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதியில் காலாவதி யாகி இருந்தது. இது தொடர்பாக தொடரப்பட் டிருந்த வழக்கு நடவடிக் கைகள் 2023 ஒக்டோபர் முடிவடைந்திருந்த போதிலும் 2024 செப்டெம்பர் வரையிலும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முகாமைத் துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உறுதிப்படுத்தலின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த சந்தர்ப் பத்தில் அதிகார சபையின் பிரச்சினை யான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தற்போது முடிவடைந் துள்ளதுடன் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்கிற்கு உரிய மிகுதி நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றது. | தேவைகளை இனங்கண்டு நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் விளை யாட்டு மைதானத்தை அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ரூபா 18,305,976 பெறுமதியான இரத்தினபுரியில் அமைந்துள்ள காணிக்காக ஆரம்ப வைப்பாக ரூபா 1,000,000 தொகை 2016 திசம்பர் 30 ஆந் திகதி அதிகார சபைக்கு செலுத்தப் பட்டிருந்தது. எனினும் மிகுதிப் பணத்தை செலுத்துவதற்கான நிதி ஏற்பாடு காணப்ப டாமையின் காரணமாக செலுத்தப்பட்ட தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | இந்தக் காணியைக் கையேற்றல் தேவையற்றதாக இருந்தமை மற்றும் காணியை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிப்பதற்கும் செலுத்தப்பட்ட ரூபா 1,000,000 தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான இயலுமையை கண்டறியுமாறு நிருவாக சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. | காணிக்காக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நூலக நடவடிக்கைகளில் புதிய தொழில் நுட்பத்தை உடையதாக பேணிச் செல்வதற் காக ஸ்தாபிக்கப்பட்ட KOHA கணனி முறைமை ஸ்பதாபிப்பதற்காக ரூபா 1,013,315 செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த முறைமை செயற்படும் நிலைக்கு | முறைமையை அமுல்படுத்துவ தற்குரிய மேலும் ஒரு பயிற்சி செயலமர்வை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் | முறைமையினை அமுல்படுத்தும் நிலைமையை விரைவாக நியமித்து பயன்பாட்டிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உட்படுத்தா மையின் காரணமாக செலவிடப்பட்ட செலவினம் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மற்றும் அரசாங் கத்தின் செலவினங்கள் வரையறுக்கப்பட்டதன் காரணமாக அந்த செயலமர்வை பூர்த்தி செய்ய முடியாதிருந்ததுடன் உரிய பயிற்சி செயலமர்வை நடாத்தும் ஆரம்ப வேலையின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப் படுகின்றது. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரதான அலுவலகம் நடாத்திச் செல்லும் நோக்கத்துடன் தெஹிவளை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவன வளவில் ரூபா 20,486,321 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் 03 மாடிகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2017 பெப்ருவரி 21 ஆம் திகதி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந் ததுடன் மிகுதி மாடிகள் இரண்டினதும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அந்தக் கட்டிடம் கையளிக்கப் பட்ட திகதியில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கட்டிடத்தைப் பூர்த்தி செய்யாமையின் காரணமாக தலைமை அலுவலகம் நடாத்திச் செல்வதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 திசம்பர் வரையான காலப் பகுதிக்காக ரூபா 64,476,564 வாடகைச் செலவினம் நிறுவனத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டி ருந்தது. மேலும் அந்தக் கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,251,022 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2024 செப்டெம்பர் 30 வரையும் பிரதான அலுவலகத்தின் நடவடிக்கைகள் அந்த கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக இரண்டாவது கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன் நிருவாக சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தால் நிர்மாண நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் விரைவாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது. | பூர்த்தி செய்யப்ப டாத நிர்மாணங் களை விரைவாக பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |